தி இந்து தமிழ் 30/7/2019

சிறுபான்மையின பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு உதவித்தொகை

● விண்ணப்பிக்க மாவட்ட ஆட்சியர் அழைப்பு

கோவை

சிறுபான்மையின பள்ளி, கல்லூரி மாணவர்கள் கல்வி உதவித் தொகை பெற விண்ணப்பிக்கலாம் என கோவை மாவட்ட ஆட்சியர் கு.ராசாமணி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக நேற்று அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

சிறுபான்மையினராக அறிவிக்கப்பட்டுள்ள இஸ்லாமியர், கிறிஸ்தவர், சீக்கியர், புத்தமதத்தினர், பார்சி மற்றும் ஜைன மதத்தை சார்ந்து அரசு, அரசு உதவிபெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் 2019-20-ம் கல்வியாண்டில் ஒன்று முதல் 10-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு பள்ளி படிப்பு கல்வி உதவித்தொகையும், 11-ம் வகுப்பு முதல் ஆராய்ச்சி படிப்பு வரை (தொழிற்கல்வி, பாலிடெக்னிக், செவிலியர் ஆசிரியர் பட்டயப் படிப்பு, இளங்கலை, முதுகலை பட்டப்படிப்புகள் உட்பட) பயில்பவர்களுக்கு பள்ளிமேற்படிப்பு கல்வி உதவித்தொகையும், தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி பயில்பவர்களுக்கு தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை பெறுவதற்கு மத்திய அரசின் www.scholarships.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம். இந்த கல்வி உதவித்தொகை மாணவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படும். பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை திட்டத்துக்கு தகுதியான மாணவர்கள் வரும் அக்டோபர் 15-ம் தேதி வரையிலும், பள்ளி மேற்படிப்பு மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை திட்டத்துக்கு அக்டோபர் 31-ம் தேதி வரையிலும் விண்ணப்பிக்கலாம்.

கல்வி உதவித்தொகை பெறுவதற்கான தகுதிகள், ஆன்லைனில் விண்ணப்பிக்கும் முறை மற்றும் தேவையான ஆவணங்கள் மற்றும் இதர நிபந்தனைகள் அடங்கிய விரிவான விளம்பரங்கள் http://www.bcmbcmw.tn.gov.in/welfschemes_minorities.htm என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

மேலும், இத்திட்டம் தொடர்பான வழிகாட்டி நெறிமுறைகள் http://www.minorityaffairs.gov.in/schemesperformance/scholarship-schemes என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இத்திட்டம் தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரை தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு ஆட்சியர் தெரிவித்துள்ளார்.